முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1406

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.08.2023**, சனிக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானவான்கள் துணைகொண்ட தேசிகனே
வானவர்கள் மெச்சுகின்ற அரங்கனே
வள்ளலாக வாழுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 20 ம் நாள், 05.08.2023, சனிக்கிழமை)
வரமென அரங்கன் உன் சேவைதனில்
வல்லமைபட உலகோர் கலந்து
3. அறமாக மாறி ஆற்றல்பட இயங்கிட
அனைவருக்கும் இனிபிறவா சித்தி
சித்தியதும் ஆறுமுகன் யான்
செப்பிடுவேன் அரங்கன் உன்வழி தீட்சையாக அருள்வேன்
4. இத்தரையில் உன் தர்மத்தை போற்றி
எங்கெல்லாம் உன் பேரில் அன்னதானம்
அன்னதான சேவை ஆற்றுகின்றாரோ
அவர்களெல்லாம் அரங்கன்உன் சக்திகொண்ட
5. சித்தி மிகு மாந்தர்களாக
ஜெகத்தை மாற்றும் ஞானிகளாக
ஆகவே அரங்கன் உன் ஆசிபட
ஆற்றல்பட மாற்றம் கண்டு
6. கண்டுமே உலக மாற்றம் புரிவர்
கலி இடர்களையெல்லாம் விரட்டி
பெருமைமிக்க ஞானிகளாக அற்புதம் கண்டு
ஞானஉலகம் படைத்து மேன்மை காண்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—